# 12 தூய ஆவியின் வல்லமையால் சவுலின் துணிவான பணி

## திருத்தூதர் பணிகள் 9:19-25

ஆதிக் கிறிஸ்தவத் திருச்சபை பலவிதமான சவால்களுக்கு முகம் கொடுத்த முறைகளும் அதன் பிரதிபலனாக மறைசாட்சியான ஸ்தேவானைக் கல்லெறிந்து மரணத்திற்கு உட்படுத்தியதையும் நாம் முன்னைய பாடங்களில் அறிந்தோம்.

இறை அழைப்பானது மாட்சிமையானது. ஒருவரிடம் இறை அழைப்பு இருந்தால் அவரிடம் தூய ஆவியின் வல்லமையும் பெலனும் பூரணமாக இருக்கும். இவ்வாறு திருச்சபையும் அனுதினமும் தூய ஆவியாலும் ஜெபத்தாலும் பெலனடைந்து வளர்ச்சியடைந்தது. இவ்வேளையில் கிறிஸ்தவ சபைக்கு யூத மதத்தினால் ஏற்பட்ட தடைகள், சவால்கள் அனுதினமும் அதிகரித்தன.

- அவர்கள் கிறிஸ்தவ சீடர்களைத் துன்பத்திற்குட்படுத்தினர்.
- சீடர்களைத் தலைமைச் சங்கத்திற்குக் கொண்டு சென்றனர்.
- அவர்களைக் கைதுசெய்து பொதுச்சிறையில் வைத்தனர்.
- கிறிஸ்தவ சீடர்களை கல்லெறிந்து கொலை செய்தனர்.
- திருச்சபையைச் சிதைக்க முயற்சித்தனர்.

இவ்வாறு கிறிஸ்தவ சபையை இல்லாதொழிக்க மிகவும் கடுமையான அர்ப்பணிப்போடு செயற்பட்ட விசேட நபரைப் பற்றி திருத்தூதர் பணிநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் தான் சவுல் என்னும் யூத பரிசேயன் ஆவான்.

ஸ்தேவானுக்குக் கல்லெறிந்த வாலிபர்களின் மேலுடைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் இவர் தான். (தி.ப.7:58) மேலும் கிறிஸ்தவ வீடுகளுக்குச் சென்று கிறிஸ்தவ ஆண்களையும் பெண்களையும் கைது செய்யும் தலைமைத்துவத்தையும் இவர் பெற்றிருந்தார். (தி.ப. 8-3)

இவர் ஒருநாள் கிறிஸ்தவர்களைக் கைதுசெய்ய தமஸ்கு செல்லும் வழியில்,

- இயேசு இவரைச் சந்தித்தார்.
- இயேசுவின் குரலை இவர் கேட்டார்.
- இயேசுவின் பிரசன்னத்தை இவர் அனுபவித்தார்.
- தான் செய்ய வேண்டியதைப் பற்றி இறை ஆலோசனையைப் பெற்றார்.
- அவருக்கு புதுவாழ்விற்கான வழி கிடைத்தது.
- அவர் தூய ஆவியின் வல்லமையினால் பெலனடைந்தார்.
- அவர் தூய ஆவியின் வல்லமை செயற்படுவதற்கான வழி அமைத்தார்.

இதுவரை கிறிஸ்தவ சபைக்குத் துன்பம் விளைவிக்கும் எதிரியாகப் பெயர் பெற்ற சவுல் தமஸ்குவில் புதுவாழ்வின் அனுபவத்தைப் பெற்றபின் கிறிஸ்தவ சபையின் சீடர்களிடம் செல்வதற்கு அவரால் முடிந்தது. அவரை எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள்? தனது முன்னைய வாழ்வு அவர்களோடு இணைவதற்குத் தடையாக அமையுமா? என எண்ணிய போதும், வரும் சவால்கள் அனைத்தையும் இறை திட்டத்திற்கு கீழ்ப்படிந்து தூய ஆவியின் வல்லமையினால் சவுலால் வெற்றி கொள்ளமுடிந்தது. இறை விருப்பத்திற்கு இணங்கி செயற்படும்போது இறைவன் பிறரின் சிந்தனைகளையும் மாற்றி இறைபணிக்கு ஏற்ற வழி அமைப்பார் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

மேலே குறிப்பிட்ட வண்ணம் சவுல் தூய ஆவியின் வல்லமையினால் பெலனடைந்து துணிவோடு தமஸ்குவில் உள்ள தொழுகைக்கூடத்தில் போதனை செய்வதில் ஈடுபட்டார் என்பது முக்கிய சான்றாகும். சவுல் பயமின்றித் தொழுகைக் கூடத்திற்குச் சென்று **இயேசுவே இறைமகன் என்று பறைசாற்றினார்** பின்னர் மீண்டும் மீண்டும் துணிவோடு **அதே இயேசுதான் கிறிஸ்து என உறுதிப்படுத்தி போதனை செய்தார்.**

இவ்வாறு தூய ஆவியின் வல்லமையையும் துணிவையும் பெறும்போது.

- மனப்பூர்வமாக இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கும்
- இறைவனுக்குள்ளே உறுதியாய் நிலைத்திருப்பதற்கும்
- விசுவாசத்தோடு இறைவனுக்குச் சான்று பகர்வதற்கும்
- இறை திட்டத்தை ஏற்றுக்கொண்டு பிறரையும் நம்பிக்கையில் பெலனடையச் செய்வதற்கும் எமக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

சவுல் தன் மெய்யான அனுபவத்தைப் பயமின்றி வெளிப்படுத்தி தூய ஆவியின் வல்லமையோடும் பெலத்தோடும் செயற்பட்ட போதும் வாழ்வின் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதாவது, காலங்கள் கடந்த பின்னரும் யூதர்கள் சவுலைக் கொலை செய்வதற்கு சூழ்ச்சி செய்தனர். ஆனால் தூய ஆவியின் பாதுகாப்பினாலும் பெலத்தினாலும் அவர்களால் சவுலுக்கு எதுவும் செய்யமுடியாமல் போனது. இங்கு சவுலின் சீடர்கள் அவரின் வாழ்வைப் பாதுகாக்க செயற்பட்டனர் .

நாமும் இறைவழிகாட்டலைப் பெற்று இறை அழைப்பிற்கு கீழ்ப்படியும்போது அங்கே எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம். அவ்வாறான சவால்களை வெற்றி கொள்வதற்கு தூய ஆவியின் வல்லமையும் பெலனும் எமக்குக் கிடைக்கும்.

அவ்வாறே சவால்களில் உதவியளிப்பதற்காகக் கடவுள் அநேகரை ஈடுபடுத்துவார்.

**செயற்பாடு**

1. சவுலின் இறைபணிக்கான அழைப்பினூடாக உமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு எவ்வாறான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்?